**IN THE COURT OF ADDITIONAL JUDGE (Recording Evidence -I)**
**CITY CIVIL COURT, CHENNAI-104**

**Case No.O.S.No. 2448/2016** **Date:11.08.2026**

**Deposition of witness : PW2**

**Name : Zaheeda Begum**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 on the 11th August 2026.**

---

<u>**குறுக்கு விசாரணை:**</u>

வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியும். வாதி சாட்சிப்பட்டியலில் என் பெயரை என் கணவர் கொடுத்துள்ளாரா என்றால் ஞாபகம் இல்லை. என் முதல் விசாரணையில் குறிப்பிடும் ஈச்சப்பாக்கம் சொத்து தாவா சொத்தில் உள்ளதா என்றால் தெரியவில்லை. தாவா சொத்திலிருந்து நானும் என் கணவரும் வெளியேறியப்பின் எந்த அசையா சொத்தும் நாங்கள் வாங்கவில்லை. தாவா சொத்தை வாங்க வாதியும் 1ம் பிரதிவாதியும் பணம் கொடுத்ததாக பிராதில் சொல்லவில்லை என்றால் தெரியாது. பிராதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று சரியாக ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு எழுதிய செட்டில்மண்ட் ஆவணம் 2015ல் தான் தெரிய வந்தது. என் கணவர் தான் என்னிடம் சொன்னார். என் முதல் விசாரணையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அனைத்து மக்களுக்கும் சமமாக பிரித்து கொடுப்பதாக சொன்னார் என்று நான் சொல்லுவது தவறு என்றால் சரியல்ல, அதனால் தான் பிராதில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் திருமணத்திற்கு 30 சவரன் என் பெற்றோர் போட்டதாக நான் சொல்லுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. என் திருமணத்தின் போது புகைப்படம் எடுக்கப்பட்டது. அவ்வாறு எடுத்த புகைப்படத்தில் எனக்கு 30 சவரன் நகை

போடப்பட்டத்தை காட்ட புகைப்படம் உள்ளதா என்றால் இல்லை. 15 சவரன் நகையை விற்பனை செய்ததாக நான் சொல்லுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 2008 ல் என் அப்பா சொத்து விற்பனை செய்து எனக்கு பணம் கொடுத்தாக சொல்லுவதற்கு அவ்வாறு விற்பனை செய்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 5 ம் பிரதிவாதி சிங்கப்பூர் செல்ல என் கணவரும், நானும் பண உதவி செய்ததாக நான் சொல்வதை வாதி பிராதில் சொல்லவில்லை என்றால் தெரியாது. எனக்கு வங்கி கணக்கு உண்டு. நான் வருமான வரி செலுத்தவில்லை. என் கணவர் செலுத்தி வருகிறார். என் கணவர் அவ்வாறு வரி செலுத்தவில்லை என்றாலோ, தவறாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. 1996 மற்றும் 2008 ம் ஆண்டின் என் வங்கி கணக்கு அட்டவணை தாக்கல் செய்ய முடியுமா என்றால் பார்த்து தான் சொல்ல முடியும். எனக்கு வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்றாலோ, வாதி என் கணவர் என்பதால் அவருக்கு சாதகமாக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.